தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் வாசிக்கப்படவேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகார சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக அதிகாரசபையின்

தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான “சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 76 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடுதல் திகதியின் பின்னர் 12 மாதங்களினுள் தீர்வையாகும் என எதிர்பாராத சொத்துக்கள் நடைமுறை சொத்துக்களாக வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையினால் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்காக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 58,010,000 தொகையான 15 நிலையான வைப்புக்கள் நிதி நிலைமைக் கூற்று நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கலின் கீழ் 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் சுவீகரிக்கப்பட்டிருந்த ஹந்தானை விடுமுறை இல்லத்திற்குரிய 170.56 பேர்ச் அளவான காணியின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,520 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த துடன் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 27 மற்றும் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நியாயப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் | ஹந்தானை சுற்றுலா விடுதிக்குரிய காணியின் அளவு 17.43 பேர்ச் அளவானதாகும். ஹந்தானை சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியின் பகுதியும் உள்ளடங்கலாக இந்த செயற்திட்டத்திற்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடமிருந்து ரூபா 752,337 ஆன தொகை செலுத்தி இலக்கம் 39 வரைபடத்தின் பிரகாரம் 148 ஏக்கர் 02 றூட் 03 பேர்ச் பரப்பளவான காணி இந்த அதிகார சபைக்கு சுவீகரிக்கப்பட்டுள்ளது. நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு உரிய | அதிகார சபைக்குரிய சொத்துக்கள் அவற்றின் மதிப்பீட்டு பெறுமதிக்கு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகார சபையின் காணிகளில் கிரயமானது ரூபா 55,319,710 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அலுவலகம் மற்றும் வாடகை கட்டிடம் அமைந்துள்ள காணியின் 8286 பகுதிகள் மற்றும் உத்தேச வீடமைப்பு திட்டங்களிலிருந்து எஞ்சிய சுமார் 473.15 ஹெக்டயர் பரப்பளவான காணி மதிப்பீடு செய்யப்பட்டு நியாயப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஹந்தானை சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியின் மதிப்பீட்டினை பெற்றுக் கொள்ள 2020.02.06 ஆந் திகதி விலைமதிப்புத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு கிடைத்த பின்னர் சரியான பெறுமதி புத்தகங்களில் பதிவு செய்யப்படவுள்ளது. | |
| (இ) | 1985 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 269,362,610 தொகையான 135 மோட்டார் வாகனங்கள் மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கிரயம் ரூபா 200,198,467 தொகையான ஏனைய நிலையான சொத்துக்கள் பல முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பயன்படுத்தப்பட்டவாறும் காணப்பட்டது. எவ்வாறான போதிலும் இந்த சொத்துக்கள் தொடர்பில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராத துடன் நியம இலக்கம் 03 இன் பிரகாரம் இந்த சொத்துக்களின் பயன்படு ஆயட்காலத்தினை மீள மதிப்பீடு செய்து கணக்குகளில் சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு காலப்பகுதி திருத்தப்பட்டு 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க முழுமையாக தேய்விடப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றில் | 2021 ஆம் ஆண்டிற்கான நிலையான சொத்துக்களின் கீழ் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு |

| | | |
|---|---|---|
| வீடுகள் மற்றும் வாடகை / குத்தகை வீட்டு அலகுகள் 43 இன் இருப்பின் பெறுமதி ரூபா 68,751,810 ஆக காண்பிக்கப்பட்டிருந்த துடன் இவற்றுள் ரூபா 6,263,121 கிரயமான 08 வீடுகள் மற்றும் கடைகள் வாடகை அடிப்படையில் அகற்றப்பட்டிருந்தன. அவ்வாறே மேலும் 74 வீடுகள் மற்றும் கடைத் தொகுதிகள் தொடர்பில் சட்டரீதியான சிக்கல்கள் காணப்படுகின்ற காரணத்தால் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிராத போதிலும் அது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே வாடகை / குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு உள்ள 117 வீடுகள் மற்றும் கடைகள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 13 இன் பிரகாரம் முதலீட்டுச் சொத்துக்களாக இனங் காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 1981 முதல் 1995 வரையான காலப்பகுதியினுள் அதிகார சபைக்கு வெளிநாட்டு உதவியாக கிடைத்திருந்த ரூபா 131,682,451 பெறுமதியான சொத்துக்கள் அதிகார சபையின் சொத்துக்களின் கீழ் சீராக்கப்பட்டு காலக்கழிவு செய்ய | 1981 முதல் 1995 வரை அதிகார சபைக்கு வெளிநாட்டு உதவிகளாக கிடைத்த ரூபா 131,682,451 கணக்குகளில் சீராக்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டின் | உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் வெளிநாட்டு உதவிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்காது மீளாய்வாண்டின் இறுதியில் வெளிநாட்டு நிதியமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் அதில் உள்ளடங்கியுள்ள ரூபா 96,707,280 வெளிநாட்டு உதவிகள் தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | வீரகெட்டிய வலய அலுவலகத்திற்கு தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த ரூபா 14,268,868 தொகை சரியாக கணக்கு வைக்கப்பட்டிராமை அல்லது கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் தலைமை அலுவலகத்திலுள்ள ஒத்த காசு மீதிகளுடன் இணங்காமையால் மேற்படி தொகை குறைக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் காசு மீதி மேற்படி பெறுமதியினால் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டது. | பரிசோதிக்கப்பட்டவாறு உள்ளது. | காசு மீதி தலைமை அலுவலகத்தின் ஏனைய மீதிகளுடன் இணங்காமைக்கான காரணங்கள் ஆழமாக பரீட்சிக்கப்பட்டு அறிக்கைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| | விடயம் | தொகை | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | முற்பணங்கள், வைப்புக்கள், பெற வேண்டிய மீதிகள் | 3,351,405 | விரிவான பட்டோலைகள் | பட்டோலைகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. | போதியளவான விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) நீண்டகால அடிப்படையில் பகுதிகளா செலுத்துவதற்கு வழங்கிய காணிகள் மற்றும் வீடுகள் | 21,823,692,283 | வீடுகளை பெற்றுக் கொண்டவர்களை இனங்காணுவதற்கு இயலுமை வகையில் பட்டோலை ஆவணங்கள் மற்றும் விரிவான தகவல்கள் | பட்டோலைகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. | போதியளவான விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) திரண்ட நிதியத்திலிருந்து பெற வேண்டிய மீதியாக 2010 ஆம் ஆண்டு முதல் ரூபா 47,462,689 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதியை மீளளிப்புச் செய்யப்படாது என நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சினால் 2014 ஆம் ஆண்டின் போது அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் அந்த மீதியை புத்தகங்களிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அதிகார சபையின் சொத்துக்கள் அந்த அளவிலான அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்று புத்தகங்களிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய அங்கீகாரத்தினை பெற்று துரிதமாக புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதிகார சபையினால் வெளிவாரி தரப்பினர் மற்றும் பதவியணிக்கு வழங்கிய அறவிடப்பட வேண்டிய முற்பண வைப்புக்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,001,854,252 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் 3-5 | பரிசோதித்து எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நடவடிக்கைகள் உரிய அங்கீகாரங்களைப் பெற்று துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களுக்காக மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட தீர்வையாக்கப்பட வேண்டிய மீதிகள் முறையே ரூபா 963,293,386 மற்றும் ரூபா 2,652,095,768 ஆன போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முற்பணமாக கிடைக்க வேண்டிய மீதி ஒட்டுமொத்த கடன்பட்டோர் மீதியின் 33 சதவீதத்தினை கொண்டிருந்தது. | | |
| (இ) | 30 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தீர்க்கப்படாத முற்பணத் தொகையினுள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட தீர்வையாகாத முற்பணங்களின் பெறுமதி ரூபா 64,001,469 ஆகும். | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | முற்பணங்களை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கடன் கொடுத்தோரிடமிருந்து 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 202,530,915 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,828,306,764 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் தொடர்ந்தும் பொறுப்பு அல்லாத கடன் மீதிகள் தொடர்பில் தேடிக் கண்டறிந்து மீண்டும் வருமானமாக கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | பொறுப்பொன்று அல்லாத கடன் கொடுத்தோர் மீதிகள் தொடர்பில் ஆராய்ந்து புத்தகங்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 11 (பீ) உறுப்புரை | | ரூபா 2,271,354,730 கூட்டுத்தொகையான குறுகிய கால மற்றும் நீண்ட கால முதலீடுகள் தொடர்பாக நிதி அமைச்சரிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை. | நீண்ட கால முதலீடான HDFC OVDEC முதலீடு உரிய அங்கீகாரத்தின் படி மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறுங்கால அங்கீகாரத்திற்காக அமைச்சின் ஊடாக திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. | முதலீடுகளுக் காக பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரத்தினை உறுதிப்படுத்தும் கடிதத்தினை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(5) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 03/2015(ஈ) பந்தி | (i) | 1998 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்ட முறையே ரூபா 200,000 மற்றும் ரூபா 42,272,005 தொகையான 02 முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய 05 வருடங்களை விஞ்சிய ரூபா 122,798 கூட்டுத் தொகையான சம்பள முற்பணங்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | முற்பணங்களை பெற்றுக் கொள்ளும் போதும் தீர்ப்பனவு செய்யும் போதும் அலுவலக கட்டளைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | முற்பணங்கள் உரிய முறையில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | | (ii) | 73 பல்வேறு செயற்திட்டங்களுக்காக | பொறியியல் பிரிவுடன் இணைந்ததாக இந்த | முற்பணங்கள் உரிய முறையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்ட ரூபா 514,650,472 தொகையான 1 முதல் 5 வருட காலம் கடந்திருந்த போதிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | முற்பணத் தொகையினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 396 | இரு மாவட்ட அலுவலகங்களின் 02 வங்கிக் கணக்குகளுக்கு உரியதாக வழங்கிய போதிலும் கொடுப்பனவுகளுக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 602,142 தொகையான 06 மாதங்களை விஞ்சிய 69 காசோலைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | வங்கி இணக்க கூற்றுக்களில் நிலவும் குறைபாடுகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை இனங்கண்டு கைதவிர்ப்பதற்கு உரிய கைதவிர்ப்பு நடவடிக்கை ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் கைதவிர்க்கப்பட வேண்டியதாக தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 16,143,675 கிரயமான 11 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களை கைதவிர்க்கும் பணிகள் இடம்பெறுகின்றன. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தி மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் | செவன நிதியத்தின் பிரதான நோக்கமான வீடுகளை மிகவும் எதிர்பார்ப்புள்ள வறிய குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நிதியத்தினை மீண்டும் மீண்டும் முதலீடு செய்து வட்டி வருமானத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் | பொருத்தமான குடும்பங்களை இனங்கண்டு அங்கீகாரம் வழங்கும் நடைமுறைக்கு நீண்டகாலம் எடுப்பதனால் மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக நலன்களை வழங்குவதில் தாமதங்கள் காணப்பட்டது. 22 குடும்பங்களுக்கு நலன்களை வழங்குவதற்கு | நிதியம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்ற பயன்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டத்தின் 11 ஆம் பிரிவு | மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 328,000,000 ஆன தொகை முதலீடு செய்யப்பட்டிருந்துடன் நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாத காலப்பகுதியின் பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர்கள் ஈடுபடுத்தப்பட்டதன் பின்னர் என்ஞின் தொடர்பில் பிரதானமான பழுதுபார்த்தலின் பின்னர் ஆகிய விடயங்களில் முதன்மையாக இடம்பெறும் சந்தர்ப்பத்தின் பின்னர் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையின் 36 வாகனங்கள் தொடர்பில் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எரிபொருள் நுகர்வு பரிசோதனை செய்யப்படாத வாகனங்களுக்காக எரிபொருள் நுகர்வை பரிசோதிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஊ) | 2003 மே 30 ஆந் திகதிய 12 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தி | நிறுவனத்தின் ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கு அல்லது மற்றுமொரு நிறுவனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரமின்றி விடுவிக்க முடியாது எனவும் அவ்வாறு முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டால் அந்த காலப்பகுதியினுள் எதுவித கொடுப்பனவையும் மேற்கொள்ள முடியாது என்பதும் அதற்கு முரணாக அதிகார சபையின் 12 உத்தியோகத்தர்கள் வெளிவாரி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் இறுதியளவில் சம்பளத்துடன் விடுவிக்கப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக | வீடமைப்பு அதிகார சபைக்கு சாட்டப்பட்டுள்ள வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இணைந்ததாக கடமைகள் மேற்கொள்ளப்படுகின்ற மையால் 07 உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் மீளளிப்புச் செய்யப்படாது மூன்று உத்தியோகத்தர்கள் சம்பளத்துடனும் இருவர் சம்பளமின்றியும் வெளிவாரி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர். | சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

ரூபா 7,782,481 ஆன தொகை அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. சம்பளத்தினை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் வேறு அமைச்சொன்றுக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு 2021 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பெற வேண்டிய ரூபா 164,657 தொகை காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் குழுமம் மற்றும் அதிகார சபையின் செயற்பாட்டு பெறுபேறு முறையே ரூபா 596 மில்லியன் மற்றும் ரூபா 1,026 மில்லியனான பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதனோடிணைந்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை முறையே ரூபா 3,016 மில்லியன் மற்றும் ரூபா 3,025 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் குழுமம் மற்றும் அதிகார சபையின் நிதிப் பெறுபேறுகளில் முறையே ரூபா 2,420 மில்லியன் மற்றும் ரூபா 1,998 மில்லியனான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அதிகார சபையின் இந்த வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாக நிறுவனத்தின் நிர்வாக செலவினம் ரூபா 1,246 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் ஏனைய செலவினம் ரூபா 1,594 மில்லியனால் குறைவடைந்தமை தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 03 வருடங்களின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது, அதிகாரசபையின் நிதி விளைவுகளில் தொடர்ச்சியான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அதிகாரசபையின் நடைமுறை விகிதம் 2.19:1 மற்றும் விரைவு விகிதம் 1.79:1 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அது முறையே 1.36:1 மற்றும் 1.35:1 ஆக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அதிகார சபையினால் அபிவிருத்தி பணிகளுக்காக காணிகளை சுவீகரிப்பதற்காக தனியார் | சுவீகரிக்கப்படும் பெரும்பாலான காணிகள் கைப்பற்றப்படும் முதல் சந்தர்ப்பத்திலேயே உரித்து கையேற்கப்பட்டு | நிலவும் சிக்கல்களை துரிதமாக தீர்த்து நட்டஈடு செலுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| துறைக்கு செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகை ரூபா 101,209,033 ஆக காணப்பட்டதுடன் நட்டஈடு செலுத்துதல் தாமதமடைந்தமையின் அடிப்படையில் அந்த தரப்பினருக்கு செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூபா 33,852,455 ஆகும். அதிகார சபையினால் ஆரம்ப நட்டஈட்டுத் தொகையினை செலுத்துவதில் ஏற்பட்டமையால் செலுத்த வேண்டிய வட்டி அடிப்படை நட்டஈட்டுத் தொகை விஞ்சிய 24 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | வீடுகள் நிர்மாணித்தல் நிறைவு செய்யப்பட்டு ஆட்கள் குடியேற்றப்பட்டுள்ள போதிலும் அதிகார சபையின் பிரகாரம் உரித்து பரிசோதிக்கப்பட்டு அனுப்பி வைப்பதற்கு பல வருடங்கள் எடுப்பதால் வருடாந்தம் 7 சதவீத வட்டியும் சேர்கின்ற காரணத்தால் சில காணிகளின் நட்டஈட்டுத் தொகையினை விஞ்சி வட்டித் தொகையும் சேர்ந்துள்ளது. | பொருத்தமான நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அதிகார சபையினால் விற்பனை செய்வதற்காக நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட ரூபா 6,263,123 கிரயமான 43 வீடு மற்றும் கடைத் தொகுதிகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் வியாபார இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | மாதாந்த குத்தகை வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு குறித்த மதிப்பீட்டுப் பெறுமதிகள் கிடைத்த பின்னர் புதிய விலைகளின் கீழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) நிதி பிரிவு, ஆதனப் பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகங்களின் மூலம் தனித்தனியாக தரவுகள் பேணப்பட்ட போதிலும் விற்பனை செய்வதற்கு / வாடகை வழங்குவதற்கு / குத்தகைக்கு வழங்குவதற்கு உள்ள வீடுகள் மற்றும் கடைகளின் அலகுகளின் எண்ணிக்கையை இனங்காண இயலுமான வகையில் தயாரிக்கப்பட்ட மத்தியப்படுத்தப்பட்ட பதிவேடொன்று அதிகார | விற்பனை செய்வதற்கு / வாடகைக்கு வழங்குவதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்குள்ள வீடுகள் மற்றும் கடைகள் தொடர்பில் மத்தியப்படுத்தப்பட்ட பதிவேடொன்றினை தயாரிப்பதற்கு உரிய தகவல்களை சேகரிக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. | உரிய தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு மத்தியப்படுத்தப் பட்ட பதிவேடொன்றினை துரிதமாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | அதிகாரசபைக்குச் சொந்தமான மத்தேகொட வீடமைப்பு முறைமையின் 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் மாவட்ட முகாமையாளர் ஒருவர் வசிப்பதுடன் அது உரிய நடைமுறையில் வாடகை / குத்தகை வழங்குதல் இடம்பெற்றிராததுடன் அந்த உத்தியோகத்தரிடமிருந்து எதுவித வாடகை அல்லது குத்தகை தொகையினை அறவிடுவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது அந்த உத்தியோகத்தரின் பணி வறிதாக்கப்பட்டுள்ளது. வாசம் செய்த காலத்திற்கு உரிய தொகை கணிப்பிடப்பட்டு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டும். |
| (ஈ) | மாதிரி கிராமங்களை நடைமுறைப்படுத்தும் வழிகாட்டி (கையேடு) பிரகாரம் நலனாளிகளை தெரிவு செய்யும் அடிப்படை தகைமையானது நலனாளிக்கு அல்லது வாழ்க்கைத் துணைக்கு வீடொன்று இல்லாதிருந்தமை மற்றும் உண்மையாக வீட்டின் தேவைப்பாடு நிலவுகின்றமை என்பனவாகும். கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் மற்றுமொரு வீடொன்று உரித்தானமையின் அடிப்படையில் 182 நலனாளிகள் பதிவு செய்திராததுடன் மேலும் 09 நலனாளிகள் தமது உரித்தாகியிருந்த வீடுகளை விற்பனை செய்திருந்தனர். இதன் பிரகாரம் நலனாளிகளின் வீட்டுத் தேவைப்பாடு தொடர்பில் உரிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு வீடுகள் வழங்கப்பட்டிருக்க | கிராம உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட வீடொன்று அல்லது காணியொன்று இல்லாதிருந்தமைக்கான அறிக்கைகளை அடிப்படையாக கொண்டு நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் காணிகளை ஒதுக்கீடு செய்யும் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பெயர்ப் பட்டியலும் அதனுள் உள்ளடங்கும். | உரிய நடைமுறைக்கு பிரகாரம் நலனாளிகளை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | மாதிரி கிராமங்களை நடைமுறைப்படுத்தும் வழிகாட்டி (கையேடு) 2.1 பிரிவின் பிரகாரம் பொருத்தமான காணியொன்றினை தெரிவு செய்வதில் உள்ள குறைபாடு காரணமாக 25 மாவட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ள மாதிரி கிராமங்களுக்கு உரிய 1,089 வீடுகளின் குடியிருப்பாளர்கள் பொது வசதிகள் இல்லாதிருந்தமை மற்றும் காட்டு விலங்குகளினால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் காரணமாக வீடுகளில் குடியிருக்க முடியாத காரணத்தால் அந்த வீடுகளுக்காக செலவிடப்பட்டிருந்த தொகை விளைவற்ற செலவினமொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதற்காக செலவிடப்பட்ட தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் 2019 ஆம் ஆண்டின் போது 12 மாவட்டங்களில் திறக்கப்பட்ட 133 மாதிரிக் கிராமங்களின் வீட்டு உரிமையாளர்கள் குடியேறியிராத சதவீதமானது 15 முதல் 42 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | குறித்த கிராமங்களுக்காக மின்சாரம் மற்றும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இந்த காணிகள் வன பாதுகாப்பு அல்லது வனசீவராசிகள் வலயத்திற்கு உட்பட்ட கிராமங்கள் அல்ல. குறித்த கிராமங்களில் குடியேறியுள்ளவர் களிடமிருந்து மாதாந்த கடன் தவணைகளாக அறவிடப்படுகின்றது. மானிய வீடுகளில் குடியேறியிராத நபர்களின் மானியத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற் திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ‘‘ஒபட்ட கெயாக் ரட்டட்ட ஹெட்டக்’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா | ‘‘ஒபட்ட கெயாக் ரட்டட்ட ஹெட்டக்’’ உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு | வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் திட்டமிட்டவாறு நிறைவு |

| | | | |
|---|---|---|---|
| | 5,271,500,000 ஆன செலவில் 10,000 அலகு வீடுகளின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றுள் 5,000 அலகுகளின் பணிகள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் 3,949 வீட்டு அலகுகளின் பணிகள் மாத்திரமே நிறைவு செய்யப்பட்டிருந்தன. மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டின் 90 சதவீதம் கிடைத்திருந்த போதிலும் அவற்றுள் 6,051 வீட்டு அலகுகள் தொடர்ந்தும் நிர்மாணிக்க வேண்டியதாக காணப்பட்டது. | திட்டமிடப்பட்ட 10,000 வீட்டு அலகுகளின் பணிகளை நிறைவு செய்வதற்கு ரூபா 6 இலட்சம் படி ரூபா 6,000 மில்லியன் தேவைப்படுகின்றது. எவ்வாறான போதிலும் ரூபா 5,271.5 மில்லியன் மதிப்பிடப்பட்டதுடன் ஆண்டு நிறைவடையும் போது இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக திறைசேரியினால் கிடைத்த தொகை ரூபா 4,761.33 மில்லியன் தொகையில் பெரும்பாலான பகுதி அதாவது 1,871 மில்லியன் கிடைத்தது 2020-12-31 ஆந் திகதியே ஆகும். நிதியத்தின் முதலீட்டு மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் ஆகியவற்றுக்கிடையே குறுங்கால அடிப்படையில் இணக்கமொன்றினை காணக்கூடியதாக இருந்தது. இதுவரையிலும் 972 வீடுகளின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய திட்டங்கள் ஆராயப்பட்டு தாமதங்களுக்கான காரணங்கள் கண்டறிந்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய நிதிய நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் மீளாய்வாண்டின் செவன வீட்டு உதவியின் கீழ் 300 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 22 குடும்பங்களுக்காக மாத்திரம் நலன்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்திய உதவியின் கீழ் 1,860 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 520 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இதன் கீழ் திட்டமிடப்பட்ட 08 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | குடும்பங்கள் இனங்காணப்பட்டதன் பின்னர் கௌரவ அமைச்சரின், அமைச்சரின் செயலாளரின் மற்றும் செவன கட்டுப்பாட்டுச் சபையினதும் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளும் நடைமுறை வரையான செயற்பாட்டுக்காக நீண்ட காலம் எடுப்பதும் நாட்டில் நிலவும் Covid - 19 தொற்று நிலைமை காரணமாகவும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நலன்களை திட்டமிடுவதில் தாமதங்கள் நிலவிய போதிலும் தற்போது 22 குடும்பங்களுக்கு நலன்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டங்களை திட்டமிடும் போது நிலவும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு நடைமுறைப் படுத்தக் கூடிய காலச் சட்டகத்திற்கு திட்டங்களை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு உதவி மற்றும் கடன் நிகழ்ச்சித் திட்டங்கள் 13 இன் 111,214 வீட்டு அலகுகளிடையே மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்ட வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 37,408 அல்லது 34 சதவீதம் ஆகும். நிகழ்ச்சித் திட்டத்தினுள் ஆரம்பிக்கப்பட்ட 3,656 வீட்டு அலகுகளின் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன. | 2016-2019 காலப்பகுதியினுள் பல்வேறு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை பூர்த்தி செய்வதற்கு பாரிய தொகையான நிதி தேவைப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டினுள் இந்த வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக அரச வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படாததுடன் அதன் காரணமாக இந்தக் காலப்பகுதிக்குரிய நிகழ்ச்சித் திட்டங்களின் கருத்தில் கொள்ளக் கூடிய அளவான செயல் முன்னேற்றமொன்று காணப்படவில்லை. | பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களை நிறைவு செய்வதற்கு நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | செமட்ட செவன வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2018 ஏப்ரல் 11, 2018 திசெம்பர் 07, 2019 நவம்பர் 22 மற்றும் 2020 யூன் 12 ஆகிய திகதிகளில் நிறைவு செய்யப்பட வேண்டிய 05 செயற்திட்டங்களின் 2,503 வீட்டு அலகுகளின் 262 வீட்டு அலகுகள் மாத்திரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் 1,815 வீட்டு அலகுகளை நிர்மாணிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது 262 வீட்டு அலகுகளின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும் ஆண்டினுள் இந்த வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக அரச வரவு செலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீடு செய்யப்படாததுடன் அதனால் இந்த பூர்த்தி செய்யப்படாத நிகழ்ச்சித் திட்டங்களில் கருத்தில் கொள்ளக் கூடிய அளவிலான முன்னேற்றமொன்று காணப்படவில்லை. | பூர்த்தி செய்ய முடியாத செயற் திட்டங்களை நிறைவு செய்வதற்கு நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கடந்த வருடத்தில் ரூபா 2,000,000,000 ஆன கிரயத்தில் திட்டமிடப்பட்ட 33 வீட்டு தொகுதிகளை பழுதுபார்த்தல் மற்றும் உட்கட்டமைப்பு | 2019 ஆம் ஆண்டின் போது நகமு புறவர நிதியேற்பாட்டின் கீழ் 33 வீட்டு தொகுதிகள் பழுதுபார்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் விலைக் | நிறைவு செய்ய முடியாதிருந்த செயற்திட்டங்களை எதிர்வரும் வருடங்களில் மதிப்பீடுகளில் உள்ளடக்குவதற்கு |

| | | |
|---|---|---|
| வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் 17 வீடமைப்பு தொகுதிகளின் செயன் முன்னேற்றம் பூச்சிய முன்னேற்றத்தில் காணப்பட்டது. | கேள்விகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் 18 செயற்திட்டங்கள் வரையில் குறைவடைந்துள்ளது. அவ்வாறே 2019 ஆம் ஆண்டு நிறைவடையும் வரையிலும் சில செயற்திட்டங்கள் பெறுகை நடைமுறையினுள் காணப்பட்ட காரணத்தால் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 செப்தெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2,164 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணியில் நிரந்தர அடிப்படையில் 1,175 பதவிகளும் தனிப்பட்ட அடிப்படையில் 446 பதவிகளும் ஒப்பந்த அடிப்படையில் 282 பதவிகளும் நாளாந்த அடிப்படையில் 75 பதவிகளுமாக 1,978 கூட்டுத் தொகை காணப்பட்டது. எவ்வாறான போதிலும் ஒவ்வொரு பதவிகளையும் பகுப்பாய்வு செய்யும் போது 665 வெற்றிடங்கள் 295 மிகைகள் நிலவின. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை நியமிக்கும் போது 665 வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவியணி 295 ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை பேண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2009 யூன் 03 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பந்தியின் பிரகாரம் அதிகார சபை 2018, 2019 ஆம் ஆண்டுகளில் ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டுக்கான அறிக்கை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார சபையினால் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவன திட்டம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, பாதீடு, வருடாந்த பெறுகைகள் திட்டம், கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் ஆகியன செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்தந்த பிரிவுகளினால் உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உரிய அங்கீகாரம் எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது உள்ளக கணக்காய்வு பரிசோதனையில் பிரதான செயற்பாட்டு பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நோய் மற்றும் பதவி வெற்றிடங்கள் காரணமாக போதியளவான கணக்காய்வொன்று இடம்பெறவில்லை.<br><br>2021 ஆம் ஆண்டின் போது அது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும். | உள்ளகக் கணக்காய்வு மாவட்ட அலுவலகங்கள் மற்றும் செயற்பாட்டுத் துறைகள் தொடர்பில் கூடிய அவதானம் செலுத்தப்பட வேண்டும். |

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றுக்கு இடையே 45 சதவீதம் முதல் 3,330 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டன. | வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கு இடையே 45 சதவீதம் முதல் 3,335 சதவீதம் வரையிலான விலகல்கள் உள்ளடங்கலாக தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும். |